# <u>நிறைவேற்று அறிக்கை - 2ம் காலாண்டு</u>

<u>ஏப்ரல் முதல் ஜூன் 2017வரை</u>

<u>அறிமுகம்</u>

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு 1996ம் ஆண்டின் 21ம் இலக்க மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் கீழ் 1996ல் நிறுவப்பட்டது. இச்சட்டமானது ஆணைக்குழுவின் சட்ட அடிப்படை மற்றும் செயற்பாட்டு கொள்கைகளையும் குறித்துக்காட்டுகின்றது. இலங்கை அரசியல் யாப்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது எனினும், இது அரசியல் யாப்பின் மூலம் ஒழுங்குமுறையாக நிறுவப்படவில்லை. அரசியல் யாப்பின் ஏற்பாடுகளின் கீழ் தவிசாளரும் ஆணைக்குழுவின் அங்கத்தினர்களும் நியமிக்கப்படுகின்றனர்.

அடிப்படை உரிமைகள் மற்றும் மனித உரிமைகள் பற்றிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நியாயாதிக்கத்தினை இச்சட்டம் வரையறை செய்கிறது. இலங்கை சனநாயக சோஷலிஸக் குடியரசின் அரசியல் யாப்பின் அத்தியாயம் IIIல் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள சில சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மற்றும் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளேஅடிப்படை உரிமைகளாக மனித உரிமைகள் சர்வதேச சட்டத்தில் வரையறை செய்யப்பட்டுள்ளன.

<u>சட்டத்தால் வரையறுக்கப்பட்டுள்ள ஆணைக்குழுவின் நடவடிக்கைகள்:</u>

- செயன்முறை தொடர்பான முறைப்பாடுகள் அல்லது சட்டத்தை மீறுதல் அல்லது உடனடியாக நிகழக் கூடிய அடிப்படை உரிமை மீறல் என்பவைகள் அரசியல் யாப்பின் ஏற்பாடுகளுக்கேற்ப இணங்கி நடைபெறுகின்றதா என்பதை உறுதிப்படுத்துவதற்காக விசாரணை செய்தல் மற்றும் புலனாய்வு செய்தலுடன் இணக்கப்படுத்தல் மற்றும் மத்தியஸ்தம் செய்தல் மூலமாக தீர்மானங்களை வழங்குதல்

- அடிப்படை உரிமைகளை மேம்படுத்துவதற்காகவும் பாதுகாப்பதற்காகவும் முறைப்படுத்தப்படும் சட்டவாக்கம், நிர்வாகக் கட்டளைகள் மற்றும் நடப்புமுறைகள் உருவாக்கும் போது அரசிற்கு அறிவுரை மற்றும் உதவி செய்தல்

- தேசிய சட்டங்கள் மற்றும் நிர்வாக நடைமுறைகள் சர்வதேச மனித உரிமை விழுமியங்கள் மற்றும் தரங்களுக்கு இசைவாக அமைந்துள்ளதா என்பதை உறுதிப்படுத்துவதற்காக அரசிற்கு பரிந்துரை செய்தல்

- உடன்படிக்கைகள் மற்றும் எனைய சர்வதேச மனித உரிமை ஆவணங்கள்ஏற்று அங்கீகரித்து அரசிற்கு பரிந்துரை செய்தல்

- மனித உரிமைகள் தொடர்பான அறிவூட்டலை மேம்படுத்தல் மற்றும் கல்வியை வழங்கல் (சட்டம் 1996 இலக்கம் 21ன் 10ம் பிரிவு)

இவ்வாணைக்குழு 156 பணித்துறை அலுவலர்களைக் கொண்டு செயற்படுகிறது. இதன் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக விசாரணை மற்றும் புலனாய்வுப் பிரிவு, கல்வி மற்றும் விசேட நிகழ்வுகள், ஆராய்ச்சி மற்றும் கண்காணிப்பு, நிர்வாகம் மற்றும் நிதிப் பிரிவுகள் ஆகியவைகளுடன்அம்பறை, அனுராதபுரம், பதுளை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கல்முனை, கண்டி, மாத்தறை, திருகோணமலை மற்றும் வுவுனியா ஆகிய இடங்களில் அமைந்துள்ள பத்து பிராந்திய காரியாலயங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவும் பணிப்பாளர் ஒருவரின் தலைமையின் கீழ் செயற்படுவதோடு, ஒவ்வொரு

பிராந்திய காரியாலயமும் ஒரு இணைப்பாளரின் கீழ் இயங்குகின்றது. தலைவர் மற்றும்/அல்லது ஒரு ஆணையாளர்/ஆணையாளர்கள் ஒவ்வொரு பிரிவையும் மற்றும் பிராந்திய நிலையங்களையும் மேற்பார்வை செய்கின்றனர்.

<u>காலாண்டில் மேற்கொள்ளப்பட்ட பிரதான நடவடிக்கைகள்</u>

A. இலங்கையின் மூன்றாவது காலாந்த பூகோள மீளாய்வு தொடர்பான அதன் அறிக்கையை 2017 மே 30ம் திகதி ஆணைக்குழு சமர்ப்பித்தது.

B. பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் சமவாயத்தின் கீழ் இலங்கையின் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் தொடர்பான ஐந்தாவது காலாந்த அறிக்கைகள் ஆணைக்குழுவின் அறிக்கைகள் 2017 ஜூன் 7ம் திகதி சமர்ப்பித்ததுடன், கமிட்டிக்கு பொருளாதாரம், சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் குழுவிற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் தொலைபேசி மாநாடொன்றின் மூலம் விளக்கவுரையொன்றை வழங்கினார். இச்சந்தர்ப்பத்தில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாகநேரடியாக கருத்துப் பரிமாற்றங்கள் இடம் பெற்றன. அடைந்த முன்னேற்றங்களை கருத்திற்கொண்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பாராட்டப்பட்டது.

C. சித்திரவதைக்கு உள்ளானோர் சர்வதேச தினம் 2017ஐ குறிக்கும் முகமாக ஆணைக்குழு ஊடக நிகழ்ச்சிகளை நடாத்தியது.

D. ஆணைக்குழு அக்ரஹார காப்புறுதி திட்டத்தை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பணித்துறை ஊழியர்களுக்கு அறிமுகப்படுத்தி அமுல்படுத்தியது.

E. ஆணைக்குழு பிராந்திய நிலையங்களை மேற்பார்வை செய்வதற்கு புதிய பொறிமுறையொன்றை மேற்கொண்டது.

F. ஆணைக்குழுவிற்கான போக்குவரத்து கொள்கையொன்றை ஆணைக்குழு அறிமுகப்படுத்தியது.

G. ஆணைக்குழுவின் அங்கத்தினர்கள் மற்றும் பணித்துறை ஊழியர்களுடன் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தலைமையக வளாகத்தில் சிங்கள தமிழ் புத்தாண்டை ஆணைக்குழு கொண்டாடியது.

H. பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்காக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாப-னத்தின்வர்த்தக சேவை மற்றும்அனைத்து பிராந்திய சேவைகள் ஊடாக ‘‘மனித உரிமைகள் செய்தித் துணுக்குப் பிரசாரம்’’ சிங்கள மற்றும் தமிழ் மொழியில்ஒலிபரப்பப்பட்டது.

I. ஆணைக்குழு மனித உரிமைகள் புதிர் போட்டியின் 1ம் கட்டத்தைமாவட்ட மட்டத்தில் ஆரம்பித்தது.

J. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அரச நிறுவனங்களின் தலைவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதை கருத்திற் கொண்டு அவர்களுடைய நிறுவனங்கள் தொடர்பாக அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள முறைப்பாடுகளை தீர்ப்பதில் ஏற்படும் தாமதங்களை தடுப்பதற்காகஅவைகளுக்குரிய

தெளிவான சிறப்பியல்புகளை முடிவு செய்யும் நோக்குடன 2017.05.30ம் திகதியன்று ஆணைக்குழு ஒரு கூட்டத்தை நடாத்தியது.

K. "தென்னாப்பிரிக்காவின் யுத்தத்தின் பின்னர்சமூகத்தின் /போராட்ட அனுபவங்கள் பற்றி அரசியலமைப்பு உரிமைகள் சட்டமூலமொன்றை தயாரித்தல்" தொடர்பாக பொதுநலவாய செயலகத்துடன் இணைந்து ஒரு பொதுக் கூட்டத்தை ஆணைக்குழு ஏற்பாடு செய்தது.இச்சொற்பொழிவு தென்னாப்பிரிக்க குடியரசின் முன்னாள் பிரதி பிரதம நீதியரசர்/தென்னாப்பிரிக்க அரசியலமைப்பு நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி திரு. டிக்காங் மொசெனேகியொன் அவர்களால் 2017.06.30ம் திகதி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கேட்போர் கூடத்தில் நிகழ்த்தப்பட்டது. இக்கூட்டத்தில் சுயாதீன ஆணைக்குழுக்களின் பிரதிநிதிகள், சிவில் சமூத்தினர், ஏனைய அழைக்கப்பட்ட நிறுவனப் புரவலர்கள் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பணித்துறை ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

L. தலைவர் மற்றும் மாத்தறை பிராந்திய காரியாலயத்தின் பொறுப்பை கொண்டுள்ள ஆணையாளர் 2017 ஏப்ரில் 25ம் திகதி மாத்தறை பிராந்திய காரியாலயத்திற்கு விஜயம் மேற்கொண்டதோடு, அரசதுறை இணைப்புக் கமிட்டி அங்கத்தினர்கள் மற்றும் பிராந்திய காரியாலயங்களின் சிவில் சமூக கமிட்டி அங்கத்தினர்கள் ஆகியோர்களுடன் கூட்டங்களை நடாத்தியதன் பின்னர் ஊடக மாநாடொன்று நடாத்தப்பட்டது. திருகோணமலை பிராந்திய காரியாலய பொறுப்பை கொண்டுள்ள ஆணையாளர் 2017 ஜுன் 15 - 16ம் திகதிகளில் திருகோணமலை பிராந்திய காரயாலயத்திற்கு விஜயம் செய்து கூட்டங்களை நடாத்தினார்.

M. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 3ம் கட்ட உள்ளக பயிற்றுவிப்பு வேலைதிட்டத்தில் தொண்டர் அடிப்படையில் செயற்படுவதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பட்டப் படிப்பை மேற்கொள்ளும் பட்டதாரிகள் மற்றும் அண்மையில் வெளியான பட்டதாரிகள் ஆகியோர்களிடமிருந்து ஆணைக்குழு விண்ணப்பங்களை கோரியது.

N. இலங்கையில் வாழும் ஆதிக்குடிகளின் உரிமைகளை கண்காணித்து அவைகளை பாதுகாக்கும் நோக்குடன் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அவர்களின்விபரங்களை தொடர்ச்சியாக பிரதேச செயலகங்களிடமிருந்து சேகரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அரசாங்கத்திற்கான பரிந்துரைகள்

- சாலாவை வெடிகுண்டு அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு நட்டஈடுகளை வழங்கும் விடயம் தொடர்பாக 2017.05.03ம் திகதியிடப்பட்ட இடைக்காலப் பரிந்துரையொன்றை ஆணைக்குழு வெளியிட்டது.

- 2017.05.31ம் தியதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கு ஆணைக்குழு வளர்ந்து வரும் மதசகிப்புத்தன்மையின்மை பற்றிய ஆழ்ந்த கவலையை தெரிவித்துள்ளது.

- ஆணைக்குழு நினைவேந்தல் நிகழ்வு மற்றும் மீள் நல்லிணக்கம் பற்றிய தனது கருத்தை அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கு 2017.06.07ம் திகதிய கடிதத்தின் மூலம் விரிவாய் கூறியுள்ளது.

<u>நிறைவேற்று அறிக்கை - 2ம் காலாண்டு</u>

<u>ஏப்ரல் முதல் ஜூன் 2017வரை</u>

தலைமையகம் மற்றும் பிராந்திய நிலையங்கள் - (01.04.2017ல் இருந்து 30.06.2017 வரை)

| முறைப்பாடுகளின் வகைகள் | பிராந்தியம் | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அம்பாறை | அனுராதபுரம் | பதுளை | மட்டக்களப்பு | யாழ்ப்பாணம் | கிளிநொச்சி உப நிலையம் | கல்முனை | கண்டி | மாத்தறை | திருகோணமலை | வவுனியா | பிராந்திய மொத்தம் | தலைமையகம் | மொத்த தொகை |
| தனியார் சுதந்திரம் | 01 | 41 | 02 | 11 | 21 | 05 | 04 | 22 | 12 | 03 | 29 | 151 | 249 | 400 |
| சித்திரவதை (உடல் மற்றும் உள) | - | 19 | - | - | - | - | - | 05 | 02 | 02 | - | 28 | 58 | 86 |
| தொந்தரவுகள் | - | 04 | - | 07 | - | - | 01 | 09 | - | - | 05 | 26 | - | 26 |
| பாலியல் தொந்தரவுகள் | - | - | - | - | - | - | - | - | - | - | 07 | 07 | - | 07 |
| அச்சுறுத்தல்கள் | 01 | 01 | 01 | - | 11 | 03 | 02 | - | - | 01 | 11 | 31 | 111 | 142 |
| இழிவாக நடத்துதல் | - | 02 | - | - | 05 | 01 | 01 | - | - | - | - | 09 | - | 09 |
| எதேச்சாதிகாரமாக கைது செய்தல்/தடுத்து வைத்தல் | - | 15 | 01 | 04 | 04 | 01 | - | 07 | 09 | - | 01 | 42 | 49 | 91 |
| தடுத்து வைத்தல் நிலைமைகள் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 01 | 01 |
| கைதில் இருக்கும்போது மரணம் சம்பவித்தல் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| வலுக்கட்டாயமாக அல்லது தன்னிச்சையற்ற காணாமற் போதல் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| கடத்திச் செல்லல் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 03 | 03 |
| சட்ட நடவடிக்கைகளுக்கு அப்பாற்பட்ட கொலைகள் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| பகைமைக் கொலைகள் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| கைதிகளின் உரிமைகள் | - | - | - | - | - | - | - | - | 01 | - | 01 | 02 | - | 02 |
| காணாமற் போன நபர்கள் | - | - | - | - | - | - | - | - | - | - | 02 | 02 | - | 02 |
| காணாமல் ஆக்கப்பட்டவர்கள் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| ஏனையவைகள் | - | - | - | - | 01 | - | - | 01 | - | - | 02 | 04 | 27 | 31 |
| ஏனைய சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் | - | - | - | 02 | - | - | - | - | - | - | - | 02 | 02 | 04 |
| கருத்துச் சுதந்திரம் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| ஒன்று கூடும் சுதந்திரம் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 01 | - |
| சங்கங்கள் அமைக்கும் சுதந்திரம் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| மத சுதந்திரம் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 01 | - |
| நடமாடுவதற்கான சுதந்திரம் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தகவல் பெறும் உரிமைகள் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| ஏனையவைகள் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| தொழில் | 11 | 27 | 14 | 11 | 11 | 01 | 20 | 33 | 23 | 05 | 18 | 174 | 143 | 317 |
| கல்வி | - | 01 | 10 | 03 | 03 | 03 | 05 | 05 | 10 | 02 | 04 | 46 | 36 | 82 |
| அரச நலன்புரி சேவைகள் | 05 | 05 | - | 07 | 02 | - | 04 | 01 | - | 02 | 01 | 27 | - | 27 |
| உட்கட்டமைப்பு பாவனைகள் | 01 | 03 | 06 | 04 | 01 | - | 01 | 03 | 02 | - | 02 | 23 | 05 | 28 |
| வாக்குரிமை பதிவு தொடர்பான முறைப்பாடுகள் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 01 | 01 |
| அரச நிறுவனங்களின் செயலற்ற தன்மை பற்றிய முறைப்பாடுகள் | 04 | 15 | 15 | 27 | 20 | 06 | 24 | 35 | 20 | 18 | 12 | 196 | 72 | 268 |
| பொலிஸ் | 01 | 11 | 08 | 17 | 14 | 03 | 19 | 12 | 19 | 08 | 11 | 123 | 37 | 160 |
| ஏனைய அரச நிறுவனங்கள் | 03 | 04 | 07 | 10 | 06 | 03 | 05 | 23 | 01 | 10 | 01 | 73 | 35 | 108 |
| சிறுவர் உரிமைகள் | - | - | - | - | 01 | - | 02 | - | - | 01 | 01 | 05 | - | 05 |
| மாற்றுத் திறனாளிகளின் உரிமைகள் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| மொழியுரிமைகள் | - | - | - | - | 01 | - | - | - | - | - | - | 01 | 02 | 03 |
| புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகள் | - | - | - | - | 01 | - | - | - | - | 02 | 05 | 08 | 04 | 12 |
| (ஒருபாற் பெண் புணர்ச்சி, ஒருபாற் ஆண் புணர்ச்சி, இருபால் உறுப்புகள் கொண்ட மற்றும் ஆண், பெண் மாற்றமுறுபவர்கள்) ஆகியோரின் உரிமைகள் | - | - | - | - | 01 | - | - | - | - | - | - | 01 | - | - |
| ஆரோக்கியம் | - | - | - | - | 01 | - | - | - | 04 | - | - | 05 | - | 05 |
| காணி மற்றும் சொத்துரிமைகள் | 13 | 218 | 02 | 06 | 01 | 04 | 04 | 04 | 15 | 02 | 14 | 93 | 16 | 109 |
| உள்நாட்டில் புலம் பெயரந்நதவர்கள்/ திரும்பி வரும் அகதிகள் | - | - | - | - | - | - | - | - | - | - | 02 | 02 | - | 02 |
| சூழல் | - | - | - | 06 | 02 | - | 02 | - | - | - | - | 10 | 06 | 16 |
| நிர்வாக விடயங்கள் | 01 | 04 | 09 | 06 | 08 | 06 | 02 | 16 | 11 | 04 | 04 | 71 | 76 | 147 |
| பெண்களின் உரிமைகள் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| முதியோர் உரிமைகள் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| ஏனைய வகைகள் | - | - | - | - | 03 | - | - | - | 03 | - | 04 | 10 | - | 10 |
| ஏற்றுக் கொள்ளப்படாததைவகள்/தொடர்ந்து செயலாற்ற முடியாதவைகள் | 08 | 40 | 05 | - | - | - | - | 36 | - | 05 | - | 94 | 188 | 282 |
| கூடுதல் தகவல்கள் பெறுவதின் நிமித்தம் உள்ள முறைப்பாடுகள் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 115 | 115 |
| மொத்தம் | 44 | 164 | 63 | 83 | 77 | 25 | 68 | 155 | 100 | 44 | 96 | 919 | 915 | 1834 |

தடுப்புக் காவல் நிலையங்ளுக்கு மேற்கொண்ட விஜயங்களின் சுருக்கம்

(01.04.2017ல் இருந்து 30.06.2017 வரை)

| தலைமையகம் | பொலிஸ் நிலையம் | சிறைச்சாலைகள் | பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு (வுஜனு) |
|---|---|---|---|
| | 242 | 05 | 02 |

| பிராந்திய காரியாலயங்கள் | அம்பாறை | அனுராதபுரம் | பதுளை | மட்டக்களப்பு | யாழ்ப்பாணம் | கல்முனை | கண்டி | மாத்தறை | திருகோணமலை | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இடம் | | | | | | | | | | |
| பொலிஸ் நிலையங்கள் | 36 | 90 | 29 | 24 | 47 | 24 | 125 | 99 | 22 | 32 |
| சிறைச்சாலைகள் | - | 4 | - | 7 | 4 | - | 2 | 3 | 3 | - |
| பயங்கரவாத புலனாய்வுப் பிரிவிற்கான விஜயங்கள் | - | - | - | - | - | - | - | - | - | 2 |
| சிறுவர் பராமரிப்புஇல்ல விஜயங்கள் | 1 | 11 | - | 4 | - | 2 | - | 1 | - | - |
| புனர்வாழ்வு நிலையங்கள் - அங்கவீன நிலைய காப்பகங்கள் | - | 2- | - | - | - | - | - | - | - | 2 |
| முதியோர் இல்லங்கள் | 2 | 2 | 1 | - | - | - | 2 | - | - | - |

வெளி அக்கறையாளர்களுடன் நடாத்தப்பட்ட/பங்குபற்றிய கூட்டங்கள்/ஆய்வுரைகள்/வேலைதிட்டங்கள்

| | |
|---|---|
| 04.04.2017 | ஏஸியா பவுண்டேஷனினால் ஒழுங்கு செய்ப்பட்டு ‘‘ரிபிளெக்ஸன்’’ எனப் பெயரிடப்பட்ட மன நலம் மற்றும் உள இயல்புகள் ஒத்துழைப்பு நிகழ்வில் கலந்து கொண்டமை |
| 04.04.2017 | மனித உரிமைகள், சனநாயகம் மற்றும் தொழிலாளிகள் பற்றிய ஐக்கிய அமெரிக்க திணைக்களப் பணியகக் குழுவுடன் மேற்கொண்ட சந்திப்பு |
| 05.04.2017 | சட்டம் மற்றும் சமூக நிதியம் மற்றும் சர்வதேச மன்னிப்பு சபை ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்ட அரசியலமைப்போடு இணங்கும் பொருளாதார, சமூக மற்றும் கலாசரர உரிமைகள் தொடர்பான வல்லுனர் குழுவுடன் கலந்துரையாடலில் பங்குபற்றியமை |
| 18.04.2017 | அகதிகள் பரிந்துரையாளர்களுடன் மேற்கொண்ட சந்திப்பு |
| 12.05.2017 | புத்தசாசன அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் வெசாக் கொண்டாட்ட விழாவில் பங்கேற்றமை |
| 16.05.2017 | ஐக்கிய நாடுகள் சபையின் சமாதானப் படையணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் இலங்கை இராணுவத்தினர் தொடர்பானகருத்துக்களுடன் சந்திப்பு மேறகொண்டமை |
| 16.05.2017 | சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர்களுடன் மேற்கொண்ட சந்திப்பு |
| 16.05.2017 | உலக ஊடக சுதந்திர தினத்தை நினைவு கூறும் முகமாக இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட மாநாட்டில் பங்குபற்றியமை |
| 17.05.2017 | அதிமேதகு ஜனாதிபதியுடன் மேற்கொண்ட சந்திப்பு |
| 25.05.2017 | கணக்காய்வு தலைமை அதிபதியுடன் சுயாதீன ஆணைக்குழுக்களின் செயலாளர்களின் கூட்டத்தில் பங்குபற்றியமை |
| 29.05.2017 | ஜனாதிபதி செயலாளருடன் நடைபெற்ற கூட்டத்தில் பங்கேற்றமை |
| 02.06.2017 | அரச திறைசேரி பிரதி செயலாளருடன் நடைபெற்ற கூட்டத்தில் பங்குபற்றியமை |

| | |
|---|---|
| 30.05.2017 | கௌரவ சபாநாயகர்/அரசமைப்பு சபை தலைவருடன் மேற்கொண்ட சந்திப்பு |
| 31.05.2017 | ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளரின் பிரதிநிதிகளுடன் மேற்கொண்ட சந்திப்பு |
| 02.06.2017 | பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை முடிவுக்கு கொண்டு வரும் கூட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டமை |
| 05.06.2017 | ஆசியாவிற்றான (ஓஸீனியா) ஐரோப்பிய யூனியன் கமிட்டியுடன் மேற்கொண்ட சந்திப்பு |
| 09.06.2017 | பாடசாலை அதிபரினால் ஒழுங்கு செய்யப்பட்ட எச்ஐவி.்.எய்ட்ஸ் தொடர்பான கூட்டத்தில் கனேமுல்லை-குடாபொல்லத்த ஆரம்ப பாடசாலை பெற்றோர்களுடன் மேற்கொண்ட சந்திப்பு |
| 13.06.2017 | தேசிய சம்பளங்கள் மற்றும் தொழிற்நிலைப் பிரிவு ஆணைக்குழுவுடன் மேற்கொண்ட சந்திப்பு |
| 13.06.2017 | சட்டம் மற்றும் ஒழுங்கு பற்றிய அமைச்சு மற்றும் ஏனைய அரச அதிகாரிகளுடன் மேற்கொண்ட சந்திப்பு |
| 21.06.2017 | வாழ்வதற்கான உரிமைகள் தொடர்பான மனித உரிமைகள் நிலையத்தின் கோரிக்கைக்கு இணங்கி சித்திரவதை தொடர்பான நிகழ்ச்சிகளைக் காட்டும் திரைப்படத்திற்கான நேர்காணல் ஒன்றில் பங்குபற்றியமை |
| 27.06.2017 | வாழ்வதற்கான உரிமைகள் தொடர்பான மனித உரிமைகள் நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சித்திரவதையிலிருந்து தப்பிப் பிழைத்தவர்களுக்கு வழங்கும் ஒத்துழைப்பிற்கான சர்வதேச தின நிகழ்வில் பங்கேற்றமை |
| 28.06.2017 | இலங்கையின் அரசியலமைப்பு சபை செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட அரசியலமைப்பு சீர்திருத்தங்களைப் பற்றி மாநாட்டில் பங்கேற்றமை |
| 28.06.2017 | ரைட்ஸ் நவ் மற்றும் பொக் அஸ் வுமன் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இலங்கையில் பெண்கள் மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்கள் நிகழ்வில் பங்குபற்றியமை |
| 30.06.2017 | பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் பற்றிய வட்ட மேசை மாநாட்டில் பங்கேற்றமை: சர்வதேச பிரச்சினைகள் மற்றும் மூலோபாய ஆய்வுகள் தொடர்பான லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட தென்னாப்பிரிக்க அனுபவம் மற்றும் சர்வதேச சூழ்நிலைகள் |
| 30.06..2017 | ஐக்கிய நாடுகள் சபையின் புதிய உலக அமைப்பு எனும் மீளமைத்தல் சூழ்நிலைக்குள் தென்னாசியாவின் மனித உரிமை பிரச்சினைகள் பற்றி இலங்கை விமானப் படையின் விமானப் படை கட்டளை அதிகாரியுடன் ஆய்வுக் கட்டுரையொன்றைத் தயாரிப்பதற்காக நேர்காணல் ஒன்றில் கலந்து கொண்டமை் |

<u>பிராந்திய இணைப்புக் கமிட்டி மற்றும் சிவில் சமூக கூட்டங்கள்</u>

<u>(01.04.2017ல் இருந்து 30.06.2017 வரை)</u>

| | |
|---|---|
| அம்பாறை | - |
| அனுராதபுரம் | 2 |
| பதுளை | - |
| மட்டக்களப்பு | 4 |
| யாழ்ப்பாணம் | 1 |
| கண்டி | 2 |
| கல்முனை | 4 |
| மாத்தறை | 2 |
| திருகோணமலை | 2 |
| வவுனியா | - |

கூட்டங்கள் (உள்ளக)

| கூட்டங்கள் | ஏப்ரில் | மே | ஜூன் |
|---|---|---|---|
| சபைக் கூட்டங்கள் | - | 2 மற்றும் 15 | 20 |
| ஆணையாளர்களின் கூட்டங்கள் | 17 | 8 | 12 |
| சிரேட்ட முகாமைத்துவத்தினரின் கூட்டங்கள் | 5 | 17 | 13 |
| பிராந்திய இணைபபாளர்களின் கூட்டம் | - | - | 27 |
| பணித்துறை ஊழியர்களின் கூட்டம் | 6 | - | - |

வளதாரிகளாக பங்குபற்றியவர்கள்

| திகதி | தலையங்கம் | ஏற்பாட்டாளர்கள் | இலக்குக் குழு |
|---|---|---|---|
| 09.04.2017 | பெண்கள் உரிமைகள் | விவேகானந்தா கல்லூரியின் பழைய மாணவர் சங்கம், கொழும்பு 13 | பழைய மாணவர்கள் |
| 24.05.2017 | மனித உரிமைகளை அமுல்படுத்துவற்குரிய பொறிமுறைகள் | பண்டாரநாயக்கா சர்வதேச கற்கை தொடர்பான பயிற்சி நிறுவகம் | பங்கேற்றோர்: பாதுகாப்பு சேவை கட்ளையகம் மற்றும் பணித்துறை கல்லூரி |
| 30.05.2017 | இலங்கை பெண்கள் தொடர்பான சட்டங்கள் மற்றும் கட்டளைகள் | அங்வீனர் இயக்க ஐக்கிய முன்னணி | நிறுவனங்களின் பெண் உறுப்பினர்கள் |
| 01.06.2017 | மனித உரிமை கருத்திட்டங்கள் | சிறைகூடத் திணைக்களம் | சிறைகூட அதிகாரிகள் |

வெளிநாட்டு பயிற்சிகள்/மாநாடுகள்

| நிகழ்ச்சிகள் | பங்குபற்றியோர் |
|---|---|
| தாய்லாந்து, பேங்கொக் நகரில் 2017ம் ஆண்டு 24ல் இருந்து 26ம் திகதி வரை ஏஸியா பஸிபிக் போரம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை அபிவிருத்தி வேலைதிட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த யோக்யகர்த்தா கொள்கை மாநாடு | செல்வி. மேனகா ஹேரத், பணிப்பாளர் (கல்வி மற்றும் விசேட வேலைதிட்டங்கள்) மற்றும் திரு. எஸ்.ஏ.விஜயானந்த, புலனாய்வு அதிகாரி, பிராந்திய காரியாலயம், அனுராதபுரம் |
| தாய்லாந்து, பேங்கொக் நகரில் 2017ம் ஆண்டு ஜூன் 5ல் இருந்து 7 வரை நடைபெற்ற வணிகம் மற்றும் மனித உரிமைகள் பற்றிய பிராந்திய ஒருங்கிணைக்கப்பட்ட கற்கைநெறி. | திரு.சாமிள் சத்யதாஸ, கல்வி மற்றும் தரவு அதிகாரி, பிராந்திய காரியாலயம், அனுராதபுரம் |

கண்காணிப்புநடவடிக்கைகள்

| திகதி | நடவடிக்கை |
|---|---|
| 05.05.2017 | மிரிஹானை தேசிய தடுத்து வைத்தல் நிலையத்திற்கு மேற்கொண்ட விஜயம் |

சொந்தப்பிரேரனை செயற்பாடு (1996 ஆம் ஆண்டு 21ஆம் இலக்கம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் 14ம் பிரிவின் கீழ்)

வடமேல் மாகாணத்தில் பன்னலையில் அமைந்துள்ள சந்தலங்காவை எனுமிடத்தில் ஏற்பட்ட நீர் பிரச்சினை சம்பந்தமாக 2017.06.05ம் திகதி ஆணைக்குழு தலையிட்டமை.

கருத்திட்ட உபகுழுக் கூட்டங்கள்

| திகதி | உபகுழு |
|---|---|
| 17.05.2017 | LGBTIQ உபகுழுக் கூட்டம் |
| 31.05.2017 | கல்விக் கொள்கை உபகுழுக் கூட்டம் |
| 23.06.2017 | புலம்பெயர் தொழிலாளர்களின் உபகுழுக் கூட்டம் |
| 22.06.2017 | பால் / நிலை தொடர்பான உபகுழூக் கூட்டம் |

ஊடக வேலைதிட்டங்கள்

| திகதி | தொலைகாட்சி/வானொலி நிகழ்ச்சி மற்றும் பத்திரிகை ஆக்கங்கள் | செல்தடம்/பத்திரிகை | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிலிருந்து பங்கேற்றோர் |
|---|---|---|---|
| 07.06.2017 | ஆயுபோவன் சுப தவசக் | ஸ்ரீ லங்கா ரூபவாஹினி கூட்டுத்தாபனம் | திரு. தீபிகா உடகம,தவிசாளர் |
| 26.06.2017 | பேஸ் த நேஷன் | எம்டிவி | திரு. தீபிகா உடகம,தவிசாளர் மற்றும் ஆணையாளர் |
| 30.06.2017 | ஓபன் போரம் | இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் | திரு. தீபிகா உடகம,தவிசாளர் |

பிராந்திய காரியாலயங்களால் 01.04.2017ல் இருந்து 30.06.2017 வரை நடாத்தப்பட்ட மனித உரிமைகள் அறிவூட்டல் வேலைதிட்டங்கள் மற்றும் விரிவுரை உதவிகளின் எண்ணிக்கைகள்

| பிராந்திய காரியாலயங்கள் | வேலைதிட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| அம்பாறை | - |
| அனுராதபுரம் | 6 |
| பதுளை | 1 |
| மட்டக்களப்பு | 5 |
| யாழ்ப்பாணம் | 4 |
| கண்டி | 3 |
| கல்முனை | - |
| மாத்தறை | - |
| திருகோணமலை | - |
| வவுனியா | - |

நிதியியல் அறிக்கை (01.04.2017 - 30.06.2017)

| | |
|---|---|
| ஆரம்ப மீதி | 3,524,461.99 |
| திறைசேரியிலிருந்து பெற்ற முற்பணம் | |
| மீண்டெழும் செலவினம் | 67,060,000.00 |
| மூலதனம் | - |
| ஏனைய வருவாய்கள் | 33,683.67 |
| மொத்தம் | **70,618,145.66** |
| | |
| செலவினம் | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 24,700,689.03 |
| பிரயாணச் செலவினங்கள் | 162,044.00 |
| வழங்கல்கள் | 1,067,983.40 |
| செயற்பாட்டு செலவினம் | 333,190.78 |
| சேவைகள் | 40,703,102.12 |
| மாற்றல்கள் | 914,172.49 |
| மூலதன சொத்துக்களை சீர்திருத்துதல் மற்றும் மேம்படுத்தல் | - |
| மூலதனச் சொத்துக்களை கையகப்படுத்தல் | 10,500.00 |
| கொள்திறன் வளர்த்தல் | 39,686.00 |
| | |
| மொத்த செலவினங்கள் | **67,931,367.82** |